தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-1-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தைப்பட்டத்தில் மக்காச்சோளத்தை விதைக்கவும்

இந்தியாவில், மக்காச்சோளம் 2014-15ஆம் ஆண்டில் 7.8 மில்லியன் எக்டரில் பயரிடப்பட்டு 16.03 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கர்நாடகா, ஆந்திரபிரதேசம், பீகார், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மக்காச்சோளம் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில், 2014-15ஆம் ஆண்டில் மக்காச்சோளம் 0.33 மில்லியன் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 1.81 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில், நீர்பாசன வசதி கொண்ட விவசாயிகள் தைப்பட்டத்தில் மக்காச்சோளத்தை பயிரிடுகின்றனர். தமிழ்நாட்டின், மக்காச்சோள உற்பத்தி நமது மாநில தேவையில் பாதி அளவு மட்டுமே பூர்த்தி செய்ய உதவுகிறது. தற்போது அரியலூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மக்காச்சோள வரத்து வர துவங்கியுள்ளது. பிற மாவட்டங்களிலிருந்து வரும் வரத்து சனவரி மத்தியில் துவங்கும். மார்ச் மாதத்தில், ஆந்திரபிரதேசத்திலிருந்து வரும் வரத்து உள்நாட்டு தேவைகளையும் மற்றும் பீகாரிலிருந்து வரும் வரத்து கோழி தீவனத்தையும் பூர்த்தி செய்யும். வர்த்தக மூலங்களின் படி, அறுவடையின் போது மக்காச்சோள ஏற்றுமதி தேவை குறைவாக இருந்தாலும், உள்நாட்டின் தேவை மக்காச்சோளத்தின் விலையை நிலையாக வைக்கும்.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறைவிற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின்

விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

பொருளாதார அளவைகளின் அடிப்படையில், தைப்பட்ட மக்காச்சோளத்தின் பண்ணை விலை அறுவடை காலமான மார்ச்–ஏப்ரல், 2016ல்குவிண்டாலுக்கு ரூ.1,350–ரூ.1,400வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி:- 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு,தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறுதானியங்கள் துறை,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசிஎண் :- 0422-2450507

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்